# இஸ்ரேல்

# அதிசயங்களின் தேசம்



# இஸ்ரயேல்:
# அதிசயங்களின் தேசம்

*என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன் ; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி,அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனி பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.*

*ஆமோஸ் 9:14,15*

வேதமாணவர்கள்
ஈரோடு,
ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு.
தொடர்பு எண்: *97886 19229, 94888 31799*
இமெயில் : baskar_harvest@yahoo.co.in

www.biblestudentstamil.com

## பொருளடக்கம்


*இஸ்ரயேல், அதிசயங்களின் தேசம்.............................................*

*யாருடைய தேசம்?..............................................................*

*தேவனுடைய தேசத்தை உலக இராஜ்ஜியங்கள் பங்கிட்டன.......*

*எல்லையை விரிவுபடுத்துதல்...................................................*

## அத்தியாயம் – 1

# இஸ்ரயேல், அதிசயங்களின் தேசம்

## அரை நூற்றாண்டுக்குள்ளாக நடந்த அதிசயங்கள்

*புதிதாய் பிறந்த இஸ்ரயேல் தேசமானது 1998-ம் ஆண்டு தமது 50 வது வயதை தொட்டது. என்ன ஒரு ஐம்பது வருடங்கள்! 1948ம் ஆண்டு இஸ்ரயேல் தேசம் மீண்டும் பிறந்ததே வரலாற்றின் அதிசயமாக கருதப்படுகிறது என்பதில் இருந்து தொடங்குவோம் (எசேக்கியேல் 37;1-11; லூக்கா 2:29,30). இந்த தேசம் போல வேறு எந்த தேசமும் அழிக்கப்பட்டதில்லை, இதன் மக்கள் போல் வேறு எந்த நாட்டவரும் பூமியின் கடையாந்தரம் மட்டும் சிதறடிக்கப்பட்டதில்லை. இதன் பின்னர், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து, அவர்கள் தங்ளுடைய தாயக தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்டு, மீண்டும் ஒரு தேசமாக மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டனர்.*

*1948-ம் ஆண்டு மே 14-ம் நாளில், இஸ்ரயேல் தன்னைதானே சுதந்திர நாடு என்று பிரகடனப்படுத்திய போது, இன்னொரு அதிசயம் நடந்தது. புதிதாய் பிறந்த தேசம் மீது ஏழு அரேபிய நாடுகளின் கூட்டுப்படைகள் போர் தொடுத்து, "யூதர்களை கடலில் தள்ளுவோம்" என்று சூளுரைத்தது. 100 அரேபிய வீரர்களுக்கு ஒரு யூத வீரன் என்ற எண்ணிக்கையில் இருந்தாலும், இஸ்ரேல் தம்மீது படையெடுத்த படைகளை விரட்டியதோடு மட்டுமல்லாமல், ஐ.நா.பங்கீடு திட்டம் கொடுத்த இடங்களுக்கு மேலாக அதிக இடங்களை கைப்பற்றியது. அப்போரில் இஸ்ரேலின் படைகளை வழிநடத்தி சென்றவரான, இகேல் யாதீன்* (Yigel yadin), *இஸ்ரேலின் இந்த வெற்றியை "***ஒரு அதிசயம்***" என்று அழுத்தமாக விளக்குகிறார்.*

## <u>ஐந்து அதிசயம் பற்றிய உதாரணங்கள்</u>

*இஸ்ரேலின் பழமையான விளைநிலமான தெகனியாவை* (Degania) *சிரியாவின் 200 கவச வாகனங்கள் (45 பீரங்கிகள் உட்பட) கொண்ட அணிவகுப்பு தாக்கியது. என்ன ஒரு தோல்வியாக இவை விளங்கியிருக்க வேண்டும்! பீரங்கிகள் இல்லாததால் சிரியாவின் முன்னேற்றத்தை, யூதர்களின் படைகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. 1870ம் ஆண்டு நடந்த பிரஞ்சு - புருசியா போரில், பிரஞ்சு படை உபயோகப்படுத்தின நான்கு சிறு பீரங்கிகள்*

மட்டும் இஸ்ரேலிடம் இருந்தது. பழைய கோட்டையில் நிறுவப்பட்டிருந்த நான்கு சிறு பீரங்கிகளிலிருந்து, இரண்டு மட்டும் உடனடியாக கழற்றப்பட்டு, தெகனியாவுக்கு கொண்டுவரப்பட்டது. இஸ்ரேலிய படைத்தலைவரான மோசே தயான் (Moshe Dayan) உடனடியாக அப்பீரங்கிகளின் பாகங்களை ஒன்று சேர்த்து, அதன் மூலமாக இஸ்ரேலின் விளைநிலமான கிப்புட்ஸ் (Kibbutz) எல்லைக்குள் நுழைந்த முதல் சிரியா பீரங்கியை தாக்கினார். முன்னேறி வந்த மற்ற பீரங்கிகளும் தாக்கப்பட்டது. இந்த இரண்டு சிறு பழைய பீரங்கிகளும் இஸ்ரேலின் தளவாடங்களில் பாதியாக உள்ளது என்பதை சிரியா போர் வீரர்களுக்கு தெரிந்திருந்தால், நிச்சயமாக தாக்குதலில் முன்னேறியிருந்திருப்பார்கள். ஆனால் உடனே அந்த கவச வாகனங்கள் தாங்கள் வந்த பாதையில் வேகமாய் திரும்பி, மடமட வென்று மலையின் பாதையை நோக்கி திரும்பி சென்றார்கள்.

கலிலேயா கடலுக்கு அருகில் இருக்கும் சபேத் (Safed) என்ற இடத்தை சிறிய அளவிலான இஸ்ரேலிய படை வீரர்கள், ஆயிரக்கணக்கான அரேபியர்களை தடுத்து நிறுத்தி வைத்திருந்தனர். அப்போது திடீரென்று பெரிய புயல் ஒன்று உருவானது. விரக்தி அடைந்த இஸ்ரேலிய போர் வீரர்கள் அவர்களிடம் இருந்த பெட்ரோலிய பொருளை, 50 காலியான பெரிய குடுவையில் ஊற்றி, அவற்றை பற்ற வைத்து, மலையில் இருந்து உருட்டி விட்டார்கள். சரிவுகளில் பறந்து கொண்டிருக்கும் கொழுந்து விட்டு எரியும் குடுவைகள், பாறையின் மேல் மோதுவதால் ஏற்படும் சத்தம், அதனோடு சேர்ந்து புயல் - இவையெல்லாம் சேர்ந்து ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்கியதால், பயந்து போன அரேபியர்கள், ஏதோ இரகசிய ஆயுதம் கொண்டு தாக்கப்படுகிறோம் என்று கற்பனை செய்து, அங்கிருந்து தப்பி ஓடினார்கள்.

1948-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், நெகவில் (Negev) இருந்த இஸ்ரேலிய குடியிருப்புகளை எகிப்திய படைகள் தாக்கி வந்தார்கள். இதோடு மட்டுமல்லாமல், எகிப்திய இராணுவ அணிவகுப்புகள் வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. இதனை தடுக்க, வேதாகமத்தில் உள்ள தந்திரத்தை யாதின் (Yadin) உபயோகப்படுத்தினார். பல நூற்றாண்டு காலங்களாக மறக்கப்பட்ட பழங்கால சாலையானது, எகிப்திய மத்திய காவற்படை இருக்கும் முசரபா (Mushrafa) என்ற இடத்திற்கு நேராக செல்வதை வேதாகமம் குறித்து காட்டியது. பெரிய வண்டிகள் கொண்டு பெறும் அளவிலான கற்பாறைகள் நகர்த்தப்பட்டன. அந்த வேதாகம சாலையில், இஸ்ரேலிய போர்வீரர்கள் கவச வாகனங்களிலும், பொறி வண்டி மற்றும் வினியோகிக்கும் பார வண்டிகளிலும், இரவு நேரத்தில் ஒளிந்து சென்று, எகிப்தியர்களை வியப்பில் ஆழ்த்தினர். இதனால் எகிப்திய மத்திய படைப்பிரிவு தோற்கடிக்கப்பட்டு, 14 நாட்கள் பிறகு போர் முடிவடைந்தது.

லிடா (Lydda) விமான நிலையத்தை கைப்பற்ற, கிதியோனின் தந்திரம் உபயோகப்படுத்தப்பட்டது. ஏழாயிரம் அரேபிய போர் வீரர்கள் தாக்குவதற்கு தயாராக இருந்தார்கள். அரேபியர்கள் போல உடையணிந்து வந்த 16 இஸ்ரேலியர்கள், லிடா ஊருக்குள் ஊடுருவினார்கள். கிதியோனின் 300 போர் வீரர்கள் போல, இவர்கள் இரவு நேரத்தில் ஒரு பெரிய கிளர்ச்சியை

ஏற்படுத்தியதால் அரேபிய போர் வீரர்கள் மிகவும் குழப்பம் அடைந்து, ஒருவரையொருவர் சுட்டுக் கொண்டார்கள். இறுதியில் பெரும்பாலான அரேபிய போர்வீரர்கள் எல்லையை தாண்டி ஓடினார்கள்.

கலிலேயாவிற்கு கிழக்காக, சிரியா படைகள் திரும்பவும் ஒன்று கூடியது. சொந்த நாட்டில் தயாரிக்கப்பட்ட 24 யூத கவச வாகனங்கள் மற்றும் உந்து கலங்கள் அணிவகுப்பை கொண்டு, சுற்றி வளைக்கப்பட்ட இஸ்ரேலிய பண்ணை நிலத்தை கைப்பற்ற யூத வீரர்கள் எண்ணினார்கள். ஆனால் யூத வீரர்கள் தவறுதலாக வேறுபாதையில் சென்று, எல்லையை தாண்டி லெபனானுக்குள் நுழைந்தனர். தங்களுடைய தவறை சுதாரித்துக் கொள்வதற்குள், கலிலேயாவில் இருக்கும் சிரியா படைகளுக்கு விநியோகம் செய்ய வைத்திருந்த போர் கருவிகள் இருக்கும் இடத்திற்கு நேராக சென்றார்கள். அந்த இடத்தில் 12 வண்டிகளில் நிறைய வெடிகுண்டுகளும், இலகுவான பீரங்கிகளும் மற்றும் 20 புதிய கவச உந்து கலங்களும் இருந்தன. அப்போது பெட்ரோலிய பொருள் நிரப்பி வைக்கப்பட்டிருந்த முதல் வண்டியை இஸ்ரேலிய படைகள் தாக்கின. இதனால் அந்த வண்டி வெடித்து சிதறியதால், அதன் பின்னால் வந்த கையெறி குண்டுகள் நிரப்பப்பட்ட வண்டிகளும் வெடிக்கத் தொடங்கின. தொடர்ந்து வெடிக்கப்பட்ட சத்தங்கள், பல மைல் சுற்றளவு தொலைவு கேட்கப்பட்டது. இதனால் பயந்து போன சிரியா படைகள், தங்களுடைய சரக்குகளை விட்டு ஓட்டம் பிடித்தார்கள். வினியோகிக்க தயாராக வைக்கப்பட்டிருந்த சிரியாவின் இரயில் வண்டியை, கலிலேயாவிற்கு திரும்பி கொண்டுச் செல்ல கொஞ்சம் இஸ்ரேலிய வீரர்களே இருந்தனர். இறுதியில் சுற்றி வளைக்கப்பட்டிருந்த, இஸ்ரேலிய விளைநிலத்திற்கு வந்தனர். அப்போது யூதப்படைகள் லெபனானை கைப்பற்றினார்கள் என்ற வதந்தியை நம்பி, இஸ்ரேலை விட்டு அரேபிய படைகள் ஓட்டம் பிடித்தது என்பதனை தெரிந்துக் கொண்டார்கள்.

இதனால் 1948-ம் ஆண்டில் நடைபெற்ற போரின் வெற்றியானது மிகப் பெரிய அதிசயமாக இருந்தது. இந்த பெரிய அதிசயங்கள், சிற்சில அதிசயங்களின் கூட்டாக அமைந்தது. ஏன்? 2500 வருடங்களுக்கு முன்னதாகவே ஏசாயா தீர்க்கதரிசி, இஸ்ரேல் தேசம் மறுபடியும் தங்கள் இடத்தில் நிறுவப்படும் என்ற தீர்க்கதரிசனத்தை உரைத்துள்ளார். **“உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்...... நான் உனக்கு துணை நிற்கிறேன்” (ஏசாயா 41;12,13 )**

## இஸ்ரயேல் தேசத்தைக் கட்ட வேதாகமம் உதவியது

அதிசயங்கள் தொடர்ந்தன. மணல் திட்டுகள் மற்றும் மலேரியா சதுப்பு நிலங்களாக முன்னொரு காலத்தில் இருந்த இடங்களில், மரங்களும்,

பழங்களும் மற்றும் காய்கறிகளும் வளர்கின்றன. வரலாற்று சிறப்புமிக்க நகரங்களில் நிறைய தொழிற்சாலைகள் உருவாக்கப்படுகின்றன. பல நூற்றாண்டு காலமாக உறங்கிக் கொண்டிருந்த தேசத்தில், இன்று ஒரு வலிமையான தேசம், பிரதான சாலை மற்றும் நீண்ட குழாய்களும் அமைத்து கொண்டிருக்கிறது.

இஸ்ரேலின் ஆற்றல் மிக்க முதல் பிரதம மந்திரியான டேவிட் பென்குரியன் (David Ben Gurion) வேதாகமத்தின் தீவிர மாணவராக, இஸ்ரேல் நாடு பற்றிய துல்லியமான வரலாற்றையும் மற்றும் நிலங்களையும் பற்றி நன்கு அறிந்தவர். இதனால் பொறியாளர்கள், தோட்டக்கலை நிபுணர்கள் மற்றும் தாவரவியலாகளரிடம் ஒரு கையில் வேதாகமத்தையும் மற்றொரு கையில் ஆராய்ச்சி கருவிகளையும் அவர்களிடம் கொடுத்தார். அதிசயங்கள் நடந்தன!

வேதாகமத்தின் குறிப்புக்கள்படி,தாமிரம் மற்றும் இரும்பு சுரங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆபிரகாம் டோர் (Abraham Dor) என்கிற சுரங்கப்பொறியாளர், தாமிர வளத்தைக் கண்டு, “பழங்கால இஸ்ரயேலின் அடுப்பு உலைகளையும் மற்றும் உலோக கசடுகளையும் கண்டோம். இதை இங்கு யாரோ இப்பொழுது விட்டுச் சென்றுள்ளார்கள் என்ற எண்ணமே தோன்றுகிறது” என்று கூறினார். அவர்களுடைய சுரங்க அலுவலகத்தில், உபாகமம் 8:7,9 வசனங்கள் சுவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன:

**உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார் .....அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும் செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்.**

## தரிசு நிலத்தை சீர்ப்படுத்துதல்

பண்டைய கால இஸ்ரேலில் இருந்த வளங்கள் மீண்டுமாக தரிசு நிலத்தில் கொண்டு வரப்படும் என்று இந்த அதிசயத்தை பற்றி வேதாகமம் முன்னமே கூறியுள்ளது (ஆமோஸ் 9;14,15; எசேக்கியேல் 36;34,35). பாலஸ்தீனம் ஒரு தரிசு நாடு என்றும் விவசாயத்திற்கு உகந்தது அல்ல என்று அதிக நாளாகவே எல்லோரும் கருதி வந்தார்கள். ஆனால் தொல் பொருள் ஆராய்ச்சியாளர், 65 மைல் நீளம் கொண்ட யோர்தான் பள்ளத்தாக்கில் 70 பழங்கால குடியிருப்பு பகுதிகளை கண்டு பிடித்தார்கள். ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளுக்கும் ஒரு கிணறு இருந்தது. 3000 ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்த லோத்து ஏறெடுத்து பார்த்து “யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதுமே நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான், அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் இருந்தது” என்று மிகைபடுத்தாமல் கூறியுள்ளார் (ஆதியாகமம் 13:10). பழங்கால வசிப்புகள் பற்றி வேதாகம தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், தாண் தொடங்கி பெயர்செபா வரைக்கும் புதிய விவசாய குடியிருப்புகள் அதிகமாக தொடங்கப்பட்டன. பழங்கால ஊற்றுகள் (அல்லது) கிணறுகளில் நீரேற்று

நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆபிரகாம் காலத்தில் உருவாக்கப்பட்ட கிணறுகளில் இருந்து பெயர்செபாவிற்கு வெளியில் வாழும் மக்களுக்கு இன்றும் தண்ணீரானது வினியோகிக்கப்பட்டு வருகிறது.

இஸ்ரேல் தேசத்திற்கு முக்கிய ஒன்றாக காடுகள் தேவைப்பட்டன. இதனால் தேசத்திற்கு திரும்பி வந்ததிலிருந்து யூதர்கள், இஸ்ரேலின் தலைவர்கள் மற்றும் நண்பர்களாகிய கெய்ம் வீஸ்மேன்,லார்டு பால்ப்போர், ஜார்ஜ் V மற்றும் பலரின் நினைவாக அவர்களை மகிமைப்படுத்த ,காடுகளை அமைக்க ஆரம்பித்தனர்.

என்ன மாதிரியான மரங்களை நட வேண்டும் மற்றும் எங்கு நடவேண்டும் என்பதை குறித்து வேதாகமம் அவர்களுக்கு சரியாக உதவியது. தரிசு மலைகளே காடுகளை அமைக்க சரியான இடமாக இருக்கும் என்று தர்க்கம் நடந்துக் கொண்டிருக்கும் சமயத்தில்,யோசுவா புஸ்தகத்தில் அதற்கு தொடர்புடைய பதிலை இஸ்ரயேலர்கள் கண்டுபிடித்தார்கள். ஏற்கனவே அந்த இடத்தில் காடுகள் இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. "ஏற்கனவே மரங்கள் செழித்து வளர்ந்த இடங்களில் மரங்கள் மிக எளிதில் வளரும் என்பதை தெரிந்து கொள்ள நாங்கள் வேதாகமத்தை சார்ந்திருந்தோம்" என்று எபிரெய பல்கலைகழகத்தின் பேராசிரியர் சோகாரி விளக்குகிறார் .

"பெயர்செபாவின் மண்ணில் முதன்முதலாக ஆபிரகாம் நட்ட மரம் தாமரிஸ்கு (Tamarisk) ஆகும்" என்று இஸ்ரயேலின் காடு வளர்ப்பு அதிகாரியான முனைவர் ஜோசப் வெயிட்ஸ் கூறுகிறார். "அவரின் வழி நடத்துதல் படி 20 இலட்சம் மரக்கன்றுகளை அதே இடத்தில் நாங்கள் நட்டோம். ஆபிரகாம் செய்தது சரிதான். ஆறு அங்குலத்திற்கு கீழாக, மழை பெய்யும் தெற்கில், தாமரிஸ்கு (Tamarisk) போன்ற சில மரங்களே நன்றாக வளரும் என்பதை நாங்கள் கண்டறிந்தோம்'

இந்த எழுத்தாளுக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்திருந்த போக்கியோ குடும்பத்தினர், வேதாகமத்தில் உள்ள விவசாய கொள்கைகளின் உதவியுடன் அரவா மற்றும் நெகவ்வில் ரோஜாப்பூக்களை விவசாயம் செய்தனர். இஸ்ரயேலை பெரிய விவசாய ஜாம்பவனாக வேதாகமம் மாற்றியுள்ளது. இன்றோ உலகம் முழுவதும் பல பொருட்களை இஸ்ரேல் ஏற்றுமதி செய்கிறது. இவையெல்லாம் நடைபெற மற்றுமொரு அதிசயம் நடந்தது.வேதாகம காலத்தின் போது,பாலஸ்தீன தேசத்தில் "முன்மாரி மற்றும் பின்மாரி" என்று இரண்டு மழைக் காலங்கள் இருந்தன.ஆனால் பல நூற்றாண்டுகளாக "முன்மாரி" குறைவாகவே பெய்தது. "பின்மாரி" மற்றும் "பனித்துளிகள்" முழுவதுமாக மறைந்து போயின. ஆயினும் 1878ம் ஆண்டு முதல் "பின்மாரி" மீண்டும் பெய்ய தொடங்கியது. யோவேல் 2:23,24-ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி இரண்டு மழைகளும் பெய்யத் தொடங்கின.

## குடிப்பெயர்தலின் அதிசயம்

பூமியின் நான்கு கடையாந்திரங்களிலும் இருந்த யூதர்கள், தங்கள் நாட்டிற்கு திரும்பிவர விடுவிக்கப்பட்ட அழைப்பை கேட்டார்கள் (ஏசாயா 43;5,6). "சிதறடிக்கப்பட்ட தேசத்தில் உள்ள யூதர்கள் எல்லோரும் தங்கள் தேசத்திற்கு திரும்பிவர இஸ்ரேல் திறந்தே உள்ளது" என்று இஸ்ரேலின் சுயாதீன பிரகடனம் கூறியது.

நாட்டில் போர் நடந்துகொண்டிருந்த போதிலும், அழிவு அல்லது பொருளாதார நெருக்கடியை அந்த சிறிய தேசம் சந்தித்த போதிலும் புதிதாய் வருவார் வந்து கொண்டே இருந்தனர். இஸ்ரேல் தேசம் உருவாகி முதல் மூன்று வருடங்களில், தோராயமாக ஒரே மாதத்தில் 18,000 பேரும் சில மாதங்களில் 30,000 பேர் என்ற அளவிலும் யூதர்களின் வருகை உயர்ந்தது. மே 15, 1948 மற்றும் ஜீன் 30, 1953-ம் ஆண்டில், தேசத்தின் யூத மக்கள் தொகை இரண்டு மடங்காக உயர்ந்தது. 1956ம் ஆண்டின் முடிவில், இஸ்ரேல் மக்கள் தொகை மும்மடங்காக உயர்ந்து, 1,66,000 பேரை தொட்டது. இவர்களை ஏற்றுக்கொண்டதால் இஸ்ரேல் தேசத்திற்கு வந்த நிதி பற்றாக்குறையை சற்று நினைத்துப் பாருங்கள்! பல ஆண்டுகளாக, இஸ்ரேலில் யூதர்கள் குவியத்தொடங்கினர். 1984-1985 மற்றும் 1991ம் ஆண்டில் நம்பிக்கையற்ற நிலையில் இருந்த எத்தியோப்பியா யூதர்கள்,விமானத்தின் மூலமாக நம்பிக்கை தரும் தேசத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள். கடைசியாக,மிகவும் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட தீர்க்கதரிசனமான, இரஷ்யாவில் இருந்து வெளியேறும் யூதர்களின் வருகை 1991-ம் ஆண்டில் நிறைவேறியது. 1998-ம் ஆண்டு வரை, ஏறக்குறைய 8,00,000 யூதர்கள் முன்னாள் சோவியத் குடியரசில் இருந்து வெளியேறி இஸ்ரேலுக்கு வந்தார்கள்,இன்னும் வந்து கொண்டு இருக்கிறார்கள். பத்து இலட்சம் யூதர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இதனால் 1948-ம் ஆண்டு 6,50,000 இருந்த இஸ்ரேல் மக்கள் தொகை 1998ம் ஆண்டு சுமார் 60,00,000 ஆக ஆனது. யூதர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் அதிசயம் இன்னும் நடந்து கொண்டே இருக்கிறது.

## 1967 போரின் அதிசயம்

இஸ்ரேலை தங்களால் அழிக்க முடியும் என்று அரேபியர்கள் பெருமிதம் கொண்டார்கள். ஆனால் ஆறு நாள் போரில், இஸ்ரேலிய படைகள் சிரியா, யோர்தான், எகிப்தின் கூட்டுபடைகளை வென்று கோலான் குன்றுகளையும், கிழக்கு எருசலேமையும், மேற்கு கரையையும் (சமாரியா மற்றும் யூதேயா) மற்றும் சீனாய் தீபகற்பத்தையும் கைப்பற்றியது. வரலாற்றில் இந்த வெற்றி மிகப்பெரிய வெற்றியாக கருதப்படுகிறது. உலகம் முழுவதும் பரவியிருந்த மத உணர்வு கொண்ட யூதர்களுக்கு, முக்கியமாக அமெரிக்காவில் வாழ்ந்த யூதர்களுக்கு, தேவனிடமிருந்து அழைப்பு வந்ததாக எண்ணப்பட்டது. பல்லாயிரக் கணக்கானோர் இஸ்ரேலில் குவியத் தொடங்கினார்கள். இவர்கள் அனைவரும் இஸ்ரேலின் இருதயமாக கருதப்பட்ட மேற்கு கரையிலுள்ள சமாரியா மற்றும் யூதேயாவில் குடிப்பெயர தொடங்கினார்கள். இதன் மூலமாக தேவன் தந்த அழைப்பை இஸ்ரேல் தக்க வைத்துக் கொண்டது.மேசியாவின் யுகம் மிக அருகில் இருப்பதாக அவர்கள் அனைவரும் உறுதியாக நம்புகிறார்கள். வேதாகம சீயோனியர்களாகிய இவர்கள், சமாதான காரியங்களுக்காக எவ்விடத்தையும்

*விட்டுக் கொடுக்கக்கூடாது என்றுக் குரல் கொடுத்தும், எதிர்ப்பை தெரிவித்தும் வந்தார்கள்.*

## உயர் தொழில் நுட்ப தலைவன்

*பல தேசங்கள் பொறாமைக் கொள்ளும்படி இஸ்ரேல் பொருளாதரத்தில் மிக உயர்ந்து நிற்கும் என்று எசேக்கியேல் 38;12,13-ம் வசனங்கள் குறிப்பிடுகின்றது. இரஷ்யா யூதர்களின் வருகை அவர்களுக்கு நிதியை கொடுத்தது.இந்த வருடத்தில் தான் உயர் தொழில் நுட்ப வளர்ச்சிகள் அதிக அளவில் தொடங்கப்பட்டன. அதோடு உலகம் முழுவதும் இருந்த உற்பத்தியாளர்களோடு, இஸ்ரேலிய உயர் தொழில் நுட்ப தொழிற்சாலைகள் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. "இரஷ்யா யூதர்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மூலதனமாய் சோவியத் கம்யூனிஸ்ட் ஏற்றுக்கொள்ளாததால், அந்த நல்ல அதிர்ஷ்டம் இஸ்ரேலுக்குக் கிடைத்தது. உலகிலேயே ஆராய்ச்சியாளர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பது நாங்கள் தான்.உயர்தரமான தொழில் நுட்பத்தில் இஸ்ரேல் இன்று முக்கிய இடத்தில் உள்ளது" என்று பிரதம மந்திரி நெத்தன்யாஹு கூறினார். உலகில் உள்ள எந்த ஒரு நாட்டையும் தவிர,இஸ்ரேலின் உயர் தொழில் நுட்ப தொழிற்சாலைகளே நியுயார்க்கின் பங்கு சந்தையில் அதிகமாக பட்டியலிடப்பட்டுள்ளது............. இஸ்ரேலின் எதிரிகள் தேவனுடைய மக்களை அச்சுறுத்தும் சமயத்தில்,தேவனுடைய நாமம் மகிமைப்படுத்தப்படும் என்று தீர்க்கத்தரிசி முன்னமே கூறியுள்ளார் (எசேக்கியேல் 38:16 - 23).*

## 50 வருட ஆண்டு நிறைவு நாள்

*தங்களுடைய தேசத்தில் யூதர்கள் கூட்டிச்சேர்க்கப்பட்ட 1878ம் ஆண்டு முதலே, இஸ்ரேலின் அதிசயங்கள் தொடங்கப்பட்டது. முரண்பாடாக பாலஸ்தீன விடுதலை இயக்கமும் தங்களுடைய 50 வருட ஆண்டு நிறைவு நாளை, 1948ம் ஆண்டுத் தொடங்கி கொண்டாடியது. தங்களுடைய ஆண்டு நிறைவு நாளுக்கு நிறைய பெயர்களை பாலஸ்தீனர்கள் வைத்தார்கள். அதில் ஒன்றுதான் "ஐம்பது வருட பேரழிவு என்பதாகும்!" இரண்டு வகையான மக்கள் ஒரு தேசத்தை தங்கள் தேசமென்று கூறிக்கொள்கிறார்கள். யார் சொல்வது சரி? பாலஸ்தீனர்கள் யார்?*

<u>அத்தியாயம்-2</u>

# யாருடைய தேசம்?

## வேதாகம கூற்று

யூதர்கள் தங்கள் தேசத்தில் கூட்டிச்சேர்க்கப்படுவதற்கு முன், இஸ்ரயேலின் "இரட்டிப்பான நீதி" சரிகட்டப்படும் என்று எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார் (எரேமியா 16:14-18). தேவனோடு தயவாய் இருந்த காலத்திற்கு சமமாக அவர்களின் இந்த இரட்டிப்பான காலமும் இருக்கும். இரட்டிப்பாய் நீதியை சரிக்கட்டும் நாளில், மனுஷனும் மிருகமும் இல்லாத பாழாக்கப்பட்ட இடமாக இஸ்ரேல் தேசம் இருக்கும் என்றும் எரேமியா கூறுகிறார் (எரேமியா 33:10-16).

## பாலஸ்தீனர்களின் கூற்று

1974-ம் ஆண்டு ஐ.நா சபை முன்பாக பேசின பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான யாசர் அராபத் தன்னுடைய உரையில் "யூதர்களின் படையெடுப்பு (வருகை) 1881-ம் ஆண்டு தொடங்கியது.... பாலஸ்தீனம் புல்வெளி நிறைந்த இடமாக இருந்தது. அங்கு தங்களுடைய வாழ்க்கை மற்றும் நாகரீகத்தை அபிவிருத்தி பண்ணிக்கொண்டு அரேபிய மக்கள் வாழ்ந்து வந்தார்கள்" என்று கூறினார்.

பணக்கார அரேபிய நாடுகளின் உதவியோடு, உலகம் முழுவதும் தன்னுடைய பேச்சை பரவச் செய்து உலக மக்களை நம்ப வைக்கும் விதமாக,பரிசுத்த தேசமானது பல நூற்றாண்டுகளாக பாலஸ்தீனர்களின் நாகரீகத்தை கொண்டுள்ளதாக அராபத் கூறினார்.

இந்த கூற்றையும் மற்ற அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் சொந்த கூற்றுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்ன நடக்கும்? 1738ம் ஆண்டில், இஸ்ரயேல் தேசம் "வறண்ட நிலமாகவும்... குடியிருக்க ஆட்கள் தேவைப்படுகிறார்கள்" என்று தாமஸ் ஷா கூறுகிறார் (1). 1785-ம் ஆண்டு, இஸ்ரயேல் தேசத்தில் உள்ள மூன்று நகரங்களின் மக்கள் தொகையை கான்ஸ்டான்டைன் பிரான்காய்ஸ் டி வோல்னி பதிவு செய்தார். எருசலேமில் 12,000 - 14,000 மக்கள் மட்டுமே இருந்தார்கள். பெத்லகேமில் 600 திறம்பட்ட ஆண்கள் இருந்தனர். எப்ரோனில் 800-900 ஆண்கள் இருந்தார்கள் (2). 1835-ம் ஆண்டு "எருசலேமின் நகரத்திற்கு வெளியே, நாங்கள் எந்த உயிரினங்களையும் காணவில்லை, எந்த ஓசையையும் கேட்கவில்லை... நகரத்திலும்,

நெடுஞ்சாலையிலும், தேசத்திலும் முழு அமைதியே நிலவியது... அனைத்தும் மக்களின் கல்லறையாக இருந்தது" என்று அல்போன்ஸ் டி லாமார்டின் கூறுகிறார் (3).

1857-ம் ஆண்டு, "தேசத்தில் குடியிருப்பவர்கள் இல்லை. இதனால் தேசத்திற்கு தற்போது மக்களே அதிக அளவில் தேவைப்படுகிறார்கள்" என்று பாலஸ்தீனத்தின் பிரிட்டன் தூதரான ஜேம்ஸ் ஃபின் கூறுகிறார். இந்த வரலாற்று நோக்குதல் மூலமாக வேதாகமம் முன்னரே கூறியிருந்தது உறுதியானது. என்னவெனில் இஸ்ரயேலின் இரட்டிப்பின் காலமான தண்டனை மற்றும் சிதறடிக்கப்படும் காலத்தின் போது, மனிதர்கள் மற்றும் விலங்குகள் இல்லாமல் தேவன் தேசத்தை ஆக்குவார் (எரேமியா 33:10; சகரியா 10:12; எரேமியா 16:14-18). 1857-ம் ஆண்டு வரைக்கும், தேசமானது "மக்கள் தொகைக்காக" எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை! தேவனுடைய வழிகாட்டுதலின் படி, எதிர்பார்க்கப்பட்ட மக்கள் தொகையானது, அவர்களுடைய தண்டனைக்காலம் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி முடிந்தவுடன் 1878-ம் ஆண்டில் யூத மக்களின் வருகை மூலமாக ஆரம்பிக்கப்பட்டது.

தேசம் பாழானதை குறித்த மிக முக்கியமான கூற்றை, மார்க் டிவியன் எழுதியுள்ள இன்னோசென்ஸ் அப்ராடு (The Innocents Abroad 1867) என்ற புத்தகத்தில் காணலாம், "பாலஸ்தீனம் சாக்கு துணியிலும், மற்றும் சாம்பலிலும் உட்கார்ந்திருந்தது. சபிக்கப்பட்ட வார்த்தைகள் அதன் மீது இருந்ததால், அதனுடைய வயல்கள் காய்ந்து போயின மற்றும் அதனுடைய ஆற்றல் கட்டப்பட்டும் இருந்தது... பாலஸ்தீனம் பாழாக்கப்பட்டு அன்பில்லாமல் இருந்தது... நம்பிக்கை இல்லாமலும், சாரமில்லாமலும், மனமுடைந்த தேசமாகவும் இருந்தது!

யூதர்களின் சிதறடிக்கப்பட்ட காலத்திலும் மற்றும் இரட்டிப்பான தண்டனை காலத்திலும், இஸ்ரயேல் தேசம் பாழக்கப்பட்டுக் கிடக்கும் என்ற வேதாகம கூற்றை வரலாற்று ஆவணங்களும் உறுதிபடுத்துகின்றன. இஸ்ரயேல் பாழாக்கப்பட்ட காலத்தில் அவர்களின் தண்டனை காலம் 1878ம் ஆண்டு முடிவுற்ற பின்னர், தேசமானது யூதர்களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அரபியர்கள் தேசத்தை ஆண்ட காலத்தில் (கி.பி.640-கி.பி.1099), வளமிக்க தேசத்தில் பாலஸ்தீனர்களின் நாகரீகம் மற்றும் பாலஸ்தீனர்கள் வேரூன்றியிருந்தார்கள் என்ற பாலஸ்தீனர்களின் தற்போதைய கூற்றை வரலாற்று ஆவணங்கள் உறுதிபடுத்தவில்லை.

## தெற்கு சிரியா (*VS*) "பாலஸ்தீனம்"

இஸ்ரயேல் தேசத்தின் பெயரை "பாலஸ்தீனம்" என்று ரோமர்கள் மாற்றினர். 640-கி.பி. முதல் 1960 வரை இந்த தேசத்தை அரேபியர்கள் "தெற்கு சிரியா" என்றே கூறி வந்தார்கள். 1960ம் ஆண்டில் தான்

அத்தேசத்தை “பாலஸ்தீனம்” என்று அரேபியர்கள் அழைத்தார்கள். 18ம் நூற்றாண்டு வரை, கிறிஸ்தவ உலகம் இந்த தேசத்தை “பரிசுத்த தேசம்” என்றே அழைத்தார்கள். இதன் பின்னர் அவர்கள் “பரிசுத்த தேசம்” என்றும் “பாலஸ்தீனம்” என்று இரண்டு பெயர்களைக் கொண்டு அழைத்தார்கள். 1922ம் ஆண்டு தொடங்கப்பட்ட உலக நாடுகளின் கூட்டமைப்பானது பிரிட்டனுக்கு அதிகாரத்தை தந்து, பாலஸ்தீனத்தை யூத மக்களின் தேசமாக கொடுக்க சட்டத்தைக் கொண்டு வந்தது. அதனாலே அந்த தேசத்திற்கு அதிகாரபூர்வமாக “பாலஸ்தீனம்” என்று பெயர் வந்தது. 1948ம் ஆண்டு இஸ்ரயேல் தேசம் உருவாகும் வரை இந்த பெயர் இருந்தது. இந்த காலம் தொடங்கியே அத்தேசத்தில் வாழ்ந்த அரேபியர்கள் தங்களை “தெற்கு சிரியர்கள்” என்றும் அத்தேசம் “பெரிய சிரியாவின்” ஒரு பகுதி என்றும் கூறிக்கொண்டு வந்தார்கள். இந்த “அரபு தேசங்களில்” சிரியா, லெபனான், ஈராக், டிரான்ஸ் ஜோர்டான் மற்றும் பாலஸ்தீனம் உட்பட்டு இருந்தது. பாலஸ்தீனர்களின் அடையாளம் அதிக காலம் கடந்து கி.பி.1960 ஆண்டில் தான் பிறந்தது என்பதை டைம் பத்திரிக்கை விலாவாரியாக கூறுகிறது (5):

பாலஸ்தீனர்கள் என்ற ஒரு காரியம் இருந்ததில்லையென்று கோல்டா மேயர் ஒருமுறை தர்க்கம் செய்தார்; அந்த சமயத்தில், அவர் ஒன்றும் தவறாக சொல்லவில்லை. தன்னுடைய பரப்புரையை யாசர் அராபத் தொடங்குவதற்கு முன்னரே, பாலஸ்தீன தேசத்தில் வாழ்ந்த பெரும்பாலான அரேபியர்கள் தங்களை அரபு தேசங்களின் உறுப்பினர்களாகவே கருதினர். பாலஸ்தீனர்கள் என்பவர்கள் தனித்துவம் பெற்ற மக்கள் என்பதை அராபத்தே கொண்டு வந்தார். உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அராபத்தே அக்கருத்தை உண்டாக்கி, வடிவமைத்து, அதற்காக சண்டையிட்டு, வெளியே கொண்டுவந்தார்.....

அராபிய பாலஸ்தீன நாகரீகம் என்ற ஒன்று இருந்திருந்தால், அதனுடைய மக்கள் தொகை அதிகமாயிருக்கும் என்பது எதிர்பார்த்ததே. ஆனால் சில குடும்பங்களே அங்கு இருந்ததால், அத்தேசத்தின் மீது அராபியர்களுக்கு எந்த பிணைப்பும் இல்லை. தெற்கு சிரியாவின் அராபியர்கள் பணத்தேவைக்காக மட்டும் பாலஸ்தீனத்திற்கு வந்திருந்தாலும், ஒரு தலைமுறைக்குள்ளாகவும் (அல்லது) சிரியாவின் கலாச்சார இழுவையினாலும் (அல்லது) மற்ற அரபு தேசங்கள் மூலமாகவும் திரும்பவும் இழுக்கப்பட்டிருப்பார்கள். 1800ம் ஆண்டிற்கு பிறகு யூதர்களின் வருகையினாலும் மற்றும் யூதர்களின் நிதி முதலீட்டினாலும், தேசம் செழிப்பானதற்கு பிறகே, அராபியர்களின் வருகை அதிகரித்தது. அது வரைக்கும் அராபியர்களின் மக்கள் தொகை சராசரியாக குறைவாகவே இருந்தது. பின்பு கி.பி.1850 மற்றும் கி.பி.1918 ஆண்டுகளுக்கு இடையே, அராபியர்களின் மக்கள் தொகை 5,60,000 ஆக அதிகரித்தது. யூதர்களை குற்றம் சொல்லாமல், பிரிட்டனின் கொள்கைகளுக்கு ஆதரவாக பேசிய பிரிட்டன் காலணிகளின் அரசு செயலாளரான மால்கம் மெக் டோனால்டு கீழ் சபையில் பிரகடனப் படுத்துகையில் (நவம்பர் 24, 1938) “தங்களை நாட்டிலிருந்து விரட்டுவதாக யூதர்கள் மீது அராபியர்கள் பழிப்போட

இயலாது. 1918ம் ஆண்டிற்கு பிறகு, ஒரு யூதன் கூட பாலஸ்தீனத்திற்கு வராமல் இருந்திருந்தால், பாலஸ்தீனத்திலுள்ள அராபிய மக்கள் தொகை 6,00,000மாகவே இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்'' என்று கூறினார்...(6)

யூதர்களின் பங்களிப்பும், வருகையும் அதிகரித்துக்கொண்டே இருந்தன. முழு சமூக பொருளாதார உள்கட்டமைப்பான தொழிற்சாலைகள், விவசாயம் மற்றும் மருத்துவமனைகளை யூதர்களே உருவாக்கினர். வேலைவாய்ப்புகள் அதிகரித்ததினால், அராபியர்களின் வருகையும் அதிகரித்தது. 1939ம் ஆண்டு குடியரசுத் தலைவராக இருந்த ரூஸ்வெல்ட் ''1921ம் ஆண்டு தொடங்கி மொத்த யூதர்களின் வருகையைவிட அராபியர்களின் வருகை பாலஸ்தீனத்தில் அதிகமாக இருந்தது'' என்று கூறினார் (7). உதாரணத்திற்கு, கி.பி. 1934ம் ஆண்டில், 30,000-36,000 அராபியர்கள் சிரியாவிலுள்ள அவரான் மாகாணத்திலிருந்து ''மேம்பட்ட வாழ்விற்காக'' பாலஸ்தீனத்திற்கு வந்தாார்கள் (8).

இன்னொரு பக்கம், 1939ம் ஆண்டின் மகா பிரிட்டனின் வெள்ளை அறிக்கை, இஸ்ரயேல் தேசத்துக்கு திரும்பி வரும் யூதர்களுக்கு கதவை மூடியது. அதே சமயத்தில், இரண்டாம் உலகப் போரின் போது பெருந்திரளான அராபியர்கள் புதிய வாய்ப்பிற்காக இஸ்ரயேலுக்கு வந்தார்கள் (9). 1946ம் ஆண்டு, அமெரிக்காவின் அரச பார்வை யாளரான பார்ட்லி சி. கிரம், இலட்சக்கணக்கான அராபியர்கள் ''மேம்பட்ட வாழ்விற்காக'' பாலஸ்தீனத்திற்கு வந்தார்கள், இன்னும் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றார் (10).

## அராபியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் பிரமாணம்

1960ம் ஆண்டு வரை பாலஸ்தீனத்தை தெற்கு சிரியா அல்லது மகா சிரியாவின் ஒரு பகுதியாகவே அராபியர்கள் கருதி வந்தனர், இதனால் 1919ம் ஆண்டு ''பாலஸ்தீனம் என்று கூறிக்கொண்டு சிரியாவின் தெற்குப் பகுதியை பிரிக்கக் கூடாது என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.'' என்று சிரியாவின் காங்கிரஸ் கூறியது (11). 1918ம் ஆண்டில் பாலஸ்தீனத்தை பற்றிய அராபியர்களின் பார்வையை 1939ம் ஆண்டு ஜார்ஜ் ஆண்டோனியல் குறிப்பிடுகிறார் (12):

பாலஸ்தீனத்தின் எதிர்காலம் பற்றிய பைசலின் கருத்தானது, அவருடைய தந்தையின் கூற்றுக்கு எந்தவிதத்திலும் வேறுபடவில்லை. அரசியல் எண்ணம் கொண்ட பெரும்பாலான அராபியர்களின் கருத்தோடு பைசலின் கருத்து ஒத்துப்போனது. 1918ம் ஆண்டு ஜனவரி மாதம் அராபியர்களின் கருத்துக்களை, பிரதிநிதியாக இருந்த ஹுஸைன் ராஜா (மெக்காவின் பெரிய ஷெரிப், ஜோர்டானின் ராஜாவான ஹுஸைனின் கொள்ளுத் தாத்தா) பிரிட்டன் அரசாங்கத்திடம் எடுத்துரைத்தார். பாலஸ்தினம் என்பது அராபியர்களின் பிரதேசம் என்றும் சிரியாவின்

ஒருங்கிணைந்த பகுதி என்றும் அராபியர்கள் கருதினர்.

1939ம் ஆண்டு பாலஸ்தீனத்தைப் பற்றிய அராபியர்களின் கூற்றுக்கு ஒத்த கருத்தை கொண்டிருந்த ஜார்ஜ் ஆண்டனியோஸ் "சிரியா என்று அழைக்கப்பட்ட முழு தேசமும், தற்போது பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளது" என்று கூறுகிறார் (13). சிரியா மீது பிரான்சிற்கு உரிமை இருந்தாலும், பாலஸ்தீனத்தின் மீது உரிமையில்லாமல் இருந்தது. ஏனெனில் பாலஸ்தீனம் பிரிட்டனின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது என்று இவர் புலம்புகிறார்.

1947ம் ஆண்டிற்கு பிறகு, ஐக்கிய நாடுகளின் சபையில் "பாலஸ்தீனம் சிரியாவின் ஒரு மாகாணமாகும்...அரசியல் சாசனம் படி, பாலஸ்தீன அராபியர்கள் தன்னிச்சையாக தனியான அரசியல் நிறுவனத்தை உருவாக்க முடியாது" என்று அரேபிய பிரதிநிதிகள் கூறினார்கள் (14).

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான அகமது சுக்காரி, 1956ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி, பாதுகாப்பு சபையில் கூறுகையில் "பாலஸ்தீனம் என்பது ஒன்றுமல்ல, அது தெற்கு சிரியா என்பது எல்லோரும் அறிந்ததே"(15).

சிரியாவின் குடியரசுத் தலைவரான அபிஸ் சையத், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான யாசர் அராபத்தை ஒருமுறை பார்த்து கூறுகையில் (16):

"நாங்கள் பிரதிநிதியாக இருப்பது போல், நீங்கள் ஒன்றும் பாலஸ்தீனத்தின் பிரதிநிதி கிடையாது. பாலஸ்தீன மக்கள், பாலஸ்தீன நிறுவனம் என்று ஒன்று இருந்ததே இல்லை. சிரியா என்ற ஒன்று மட்டும் தான் உள்ளது. சிரியா மக்களின் ஒரு பகுதியாவே நீங்கள் கருதப்படுகிறீர்கள். அதனால் சிரியாவின் அதிகாரிகளாகிய நாங்களே, பாலஸ்தீன மக்களின் உண்மையான பிரதிநிதியாவோம்".

1974ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் தேதி "பாலஸ்தீனம் தெற்கு சிரியாவின் முக்கிய பகுதியாகும். அராபியர்களின் தாயக தேசம் மற்றும் சிரியாவிலிருந்து விடுவிக்கப்பட்ட பங்குதாரராக வலியுறுத்துவதே எங்கள் உரிமை மற்றும் கடமையாக நாங்கள் நினைக்கிறோம்" என்று ஆசாத் கூறினார் (17).

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இராணுவ தளபதியும், நிர்வாக குழுவின் உறுப்பினராக இருந்த ஜீகைர் முக்சின் கூறுகையில் (18):

"ஜோர்டானியர்கள், பாலஸ்தீனர்கள், சிரியர்கள் மற்றும் லெபனானியர்கள் இடையே எந்த வித்தியாசமும் இல்லை. நாங்கள் எல்லோரும் ஒரே தேசத்தை சேர்ந்தவர்கள். அரசியல் காரணத்திற்காக மட்டும் எங்கள் பாலஸ்தீன அடையாளத்தை மிகவும் ஜாக்கிரதையாக

நாங்கள் கோடிட்டு காட்டியுள்ளோம்...ஆமாம், தனித்துவமான பாலஸ்தீன அடையாளம் தந்திரோபாய நோக்கங்களுக்காக மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. பாலஸ்தீன தேசத்தை உருவாக்குவது, **இஸ்ரயேல் தேசத்துக்கு எதிரான தொடர் யுத்தத்தில் ஒரு புதிய கருவியாக உள்ளது (எங்களுடைய சொற்கள்).**

1800ம் ஆண்டு வாழ்ந்த பாலஸ்தீன கிறிஸ்தவ அராபியர்களின் முக்கியமான கூற்றை காணலாம் (19):

தேசத்தில் வாழும் அராபியர்கள் தற்காலிகமாக குடியிருப்பவர்களே தவிர நிரந்தரமான பிரஜைகள் அல்ல. தங்கள் கூடாரங்களை புல் தரையில் அமைத்துக் கொண்டார்கள் (அல்லது) பாழக்கப்பட்ட நகரத்தில் அகதிகள் முகாமை தங்களுக்கென கட்டிக்கொண்டார்கள். அவர்கள் தேசத்திற்காக எதையும் செய்யவில்லை. தேசத்திற்கு வேற்று மக்களாக இருந்தமையால், அவர்களால் அதற்கு தலைவராக முடியவில்லை. எப்படி பாலைவனக் காற்று அவர்களை இங்கு கொண்டு வந்ததோ, அதே போல் அவர்கள் வந்த வழியிலே எந்த வித அடையாளத்தையும் விட்டுவைக்காமல் திரும்பவும் அவர்களைக் கொண்டுபோய்விடும்.

அமெரிக்க இறையியலாளர்களில் மிகவும் முக்கிய நபராக விளங்கிய ஸ்டீபன் ஒலின் D.D.,L.L.D. அவர்கள் மத்திய கிழக்கில் மேற்கொண்ட விரிவான பயணத்தின் போது, பாலஸ்தீனத்தில் கண்ட அராபியர்கள் பற்றி "அனைவரும் சிரியாவின் பழைய குடியிருப்பவர்களின் வம்சாவழியினராக இருக்கலாம்" என்று எழுதுகிறார் (20).

இஸ்லாமியர்களின் புனித நூலான குரானில் முக்கிய அராபிய அறிக்கை காணப்படுகிறது. தேசம் யாருக்கு சொந்தம் என்பதை அவை விளக்குகின்றது (20):

கடவுளாகிய அல்லாஹ் இஸ்ரயேலின் புத்திரர்களோடு உடன்படிக்கை செய்து, பரிசுத்த நகரத்தை யூதர்களுக்கென்று தந்துள்ளார் என்ற வேதாகமத்தின் உண்மை கூற்றை குரானும் ஊர்ஜிதப்படுத்துகிறது (பார்க்க குரான், சூரா V "அட்டவணே"). யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட தேசமானது "ஆசீர்வதிக்கப்பட்டது" என்றும் கடைசி காலங்களில் யூதர்கள் அனைவரும் இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்றும் குரான் கூறுகிறது.

யூதர்களுக்கு நிரந்தரமாக அத்தேசத்தை தேவன் தந்தார் என்ற கிறிஸ்தவ வேதாகமத்தின் பிரமாணத்தை குரானும் உறுதி செய்கிறது. கி.பி. 670 - கி.பி.1878-ம் ஆண்டு வரை தேசத்தில் சுற்றித் திரிந்த குறைவான அராபியர்கள் யாவரும் தற்காலிக குடியிருப்பு வாசிகளே ஆவார்கள். யூதர்களின் திரும்ப கூட்டிச் சேர்த்தலோடு இணையாக நடைபெற்று வரும் தற்கால அராபியர்களின் வருகைக்கு எந்த முகாந்திரமும் இல்லையும் என்றும் தேசத்தின் மீது அராபியர்களுக்கு எந்தவித வரலாற்று உரிமை இல்லை என்ற

உண்மையை வரலாறு வெளிப்படுத்துகிறது.

## வரலாற்றின் தீர்ப்பு: தேசத்தின் உரிமைகள்

யூதர்களின் வருகை மற்றும் அவர்களின் முதலீட்டிற்கு முன்னதாகவே, பாலஸ்தீனத்தை விட்டு அராபியர்கள் பெரும் அளவில் வெளியேற ஆரம்பித்தனர். இதன் பின்னர் எல்லாம் தலைகீழானது. "...அராபியர்கள் வெளியேறின தேசமாக விளங்கிய பாலஸ்தீனம் பிற்பாடு அராபியர்களின் வருகைக்கான தேசமாக மாறியது. சீயோனிய முன்னோடிகள் உண்டாக்கின உயர்தரமான வாழ்க்கை மற்றும் புதிய வாய்ப்பிற்காக சிரியாவின் மாகாணமான அவ்ரோன் மற்றும் சுற்றியிருந்த தேசத்திலிருந்த அராபியர்கள் பாலஸ்தீனத்தில் குவியத் தொடங்கினார்கள் (22). இதனை உறுதிபடுத்தும் விதமாக பாலஸ்தீன ராயல் குழு அறிக்கை கூறுகிறது. என்னவென்றால் பால்ப்போர் பிரகடனம் தொடங்கி 1947ம் ஆண்டு வரை நடந்த ஐ.நா. சபையின் பகிர்வு தீர்மானத்தின் இடைப்பட்ட காலத்தில், பாலஸ்தீன தேசமானது அராபியர்களின் வருகையை சந்தித்தது (23). "அராபியர்களின் வருகை" தற்கால சம்பவம் என்று எர்னஸ்ட் பிரான்கன் ஸ்டைன் கூறுகின்றார் (24):

முற்கால "சீயோனிய அன்பாளர்களாலே" அராபியர்களின் வருகை உந்தப்பட்டது. 1882ம் ஆண்டிற்கு பிறகு 75% அராபிய மக்களின் தொகையானது ஒன்று குடியேறியவர்களாலும் அல்லது குடியேறினவர்களின் வம்சாவழியாலும், 100 வருடங்களுக்கு முன்னதாக பாலஸ்தீனத்தில் நடைபெற்றதாக, 1942ம் ஆண்டு சில எழுத்தாளர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

யூதர்களின் திரும்ப கூட்டிச் சேர்க்கப்படுதல் தொடங்கும் போதும் மற்றும் இஸ்ரயேலின். இரட்டிப்பான தண்டனை காலம் 1878ஆம் ஆண்டில் நிறைவேறும் வரைக்கும், இஸ்ரயேல் தேசத்தின் மக்கள் தொகை குறைவாக இருக்கும் என்ற தீர்க்கதரிசிகளின் கூற்றை வரலாற்று தீர்ப்பு மேலும் உறுதிபடுத்தியது உண்மையே (எரேமியா 33:10; சகரியா 10:12; எரேமியா 16:14-18). இந்த வருடத்திற்கு பிறகே, பெருந்திரளான அரேபியர்கள் தேசத்தில் குவிய தொடங்கியதாக வரலாற்று ஆவணங்கள் உறுதிபடுத்துகின்றன.

இந்த வரலாற்று உண்மைகள் என்ன விளக்குகின்றது என்றால் பாலஸ்தீனத்தில் இரண்டு ஆண்டுகள் மட்டும் வாழ்ந்த அரபியர்களை "பாலஸ்தீன அகதி" என ஐ.நா. சபை ஏன் உண்டாக்கினது என்பதே ஆகும் (25). பாலஸ்தீன அராபியர்கள் 1000-2000 வருடங்கள் முன்னதாகவே இஸ்ரயேலில் வாழ்ந்தவர்கள் என்ற ஐ.நா.சபை கூற்றுக்கு இந்த விளக்கம் ஒத்து வரவில்லை. "பாலஸ்தீனம்" என்ற தேசத்தை கடந்த 2000வருடங்களாக யூதர்களே ஆண்டு வந்ததனர். அரபியர்கள் தங்களை பாலஸ்தீனர்கள் என்று கூறிக்கொள்வதைப் பார்க்கிலும், யூதர்களே தங்களை

“பாலஸ்தீனர்கள்” என்று அதிகமாக கூறிக்கொள்ளலாம். ஏதாவது ஒரு மக்கள் தங்களை பாலஸதீனர்கள் என்று உரிமை கொண்டாட விரும்பினால், “பாலஸ்தீனம்” என்று பெயர் திருத்தப்பட்ட தேசத்தில், தங்கள் மூதாதையர்கள் வாழ்ந்த யூதர்களே அதற்கு பொருத்தமாவார்கள்.

அத்தியாயம் -3

# தேவனுடைய தேசத்தை இராஜ்யங்கள் பங்கிட்டன

**இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும், நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கி போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரயேல் என்னும் சுதந்திரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தை பங்கிட்டுக்கொண்டதன் நிமித்தமும்...(யோவேல் 3:1, 2)**

*தேவனுடைய இரட்டிப்பான தயையில்லாத மற்றும் தண்டனைக் காலம் முடிந்தவுடன் "தம்முடைய ஜனங்களை" வேட்டையாடி, சிதறடித்த தேசங்களோடு வழக்கு இருப்பதாக தேவன் குறிப்பிடுகிறார். தேவனுடைய வழிநடத்துதல் படி, 1878ஆம் ஆண்டு முதல் "தம்முடைய தேசத்தில்" யூதர்களை மறுபடியும் கூட்டிச்சேர்த்த தேவன், "தம்முடைய தேசத்தை பங்கிட்டதற்காக" மற்ற தேசங்களோடு வழக்காடுகிறார். அவருடைய தேசத்தை எப்படி புறஜாதி தேசங்கள் "பங்கிட்டன"?*

*இஸ்ரயேலின் கூட்டிச்சேர்த்தலை பற்றிய கடைசி கால தீர்க்கதரிசனத்தில் "முதலாம் உலகப்போர்" இரண்டாவது முக்கிய நிகழ்வாக கருதப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தையும் (பாலஸ்தீனம் உட்பட) மற்றும் வடக்கு ஆப்ரிக்காவையும் பெரும் ராஜ்யமாக ஆண்டு வந்த துருக்கி நாடு, ஜெர்மனி மற்றும் மத்திய அதிகாரங்களோடு கை கோர்த்து, நேச நாடுகளை எதிர்த்து போரிட்டது.போரில் வெற்றி பெற்ற நேச நாடுகளால் துருக்கி இராஜ்யம் உடைக்கப்பட்டபோது, அராபியர்கள் மற்றும் யூதர்கள் தங்களுக்கென்று சுயதீனமான தேசத்தை கேட்டார்கள். உலக இராஜ்யங்கள் மிகவும் தாராளமாக 22 சுயமான அரபு தேசங்களை (சுமார் 54,14,000 சதுர மைல்கள்)அராபியர்களுக்கு கொடுத்தது. அராபியர்களுக்கு தந்த தேசத்தின் அளவில் வெறும் 1% குறைவான பிரதேசங்களை மட்டுமே யூதர்கள் கேட்டனர். இந்த வேண்டுகோளை 1917 பால்ப்போர் பிரகடனத்திலும் மற்றும் 1920 உலக நாடுகளின் சான் ரெமோ மாநாட்டின் சாரம்சங்களிலும் உட்படுத்தி நேச நாடுகள் ஏற்றுக்கொண்டனர்.*

*ஏகாதிபத்திய காரணங்களுக்காக, 1921ம் ஆண்டு பிரிட்டன் அரசு பால்ப்போர் பிரகடனத்தை மீறி, அதில் குறிப்பிடப்பட்டிருந்த 77% இடங்களை பிரித்து, டிரான்ஸ் ஜோர்டான், என்ற அரேபிய அமீரகத்தை அமைத்தது. இதன் பின் 1922ம் ஆண்டு, உலக நாடுகள் சங்கம் பிரிட்டனுக்கு*

அதிகாரம் தந்து, 23% பாலஸ்தீன தேசத்தை (சமாரியா. யூதேயா, காசா, கோலான் குன்றுகள், மற்றும் கிழக்கு எருசலேம் உட்பட) யூதர்களின் தாயக தேசமாக கொடுக்க அதிகாரம் தந்தது. ஆனால் பிரஞ்சு அரசின் வற்புறுத்தலால், 1923ம் ஆண்டு கோலான் குன்றுகளை, பிரிட்டன் பிரஞ்சு அரசிடம் தாரை வார்த்தது. (26). **அவர்கள் என் தேசத்தை பங்கிட்டார்கள். கர்த்தரோ கோபமாக உள்ளார்.**

## பெட்ரோலிய அரசியல் தந்திரம்

இதன்பின்பு அரபு தேசங்களில் பெட்ரோலிய எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப் பட்டது. இதனால் "பெட்ரோலிய எண்ணெய் அரசியல் தந்திரமும்" உருவாக்கப்பட்டது. அராபியர்களை கவருவதற்காக பிரிட்டனின் வெளியுறவுக்கொள்கை அடிப்பணிந்தது. 1939ம் ஆண்டு பாலஸ்தீனத்திற்கு வரும் யூதர்களின் வருகையை பிரிட்டனின் வெள்ளை அறிக்கை தடுத்து நிறுத்தியது. மிகவும் கொடுமையான முறையில், ஐரோப்பிய யூதர்களை அமெரிக்காவும், பல நாடுகளும் ஏற்றுக்கொள்ள மறுத்தன. இதனால் மேலும் 60 லட்சம் யூதர்கள் இனப்படுகொலையால் கொல்லப் பட்டார்கள்.

உலகில் உள்ள மற்ற நாடுகளோடு கைகோர்த்து தன்னுடைய ஆணைக்கடமைகளைக் கொண்டு, யூதர்களின் வருகையை பிரிட்டன் தடுக்காமல் இருந்திருந்தால், மகிழ்ச்சியற்ற நிலையில் இருந்த எத்தனை இலட்சம் யூதர்கள் பாலஸ்தீனத்தில் பாதுகாக்கப்பட்டு அடைக்கலம் பெற்றிருப்பார்கள்? எவ்வளவு பெரிய கொடிதான வரலாறு குற்றம். பிரிட்டனின் பிரதம மந்திரியாக இருந்த லாய்டு ஜார்ஜ் பால்ப்போர் பிரகடனத்தை வெளியிட்டச் சமயத்தில், தம்முடைய தேசிய வானொலியில் 1939ம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரிட்டன் வெள்ளை அறிக்கையானது "தேச துரோக செயலாக கருதப்பட்டு, பிரிட்டன் பெயரை அவமதிக்கும்" என்று கூறினார் (27).

**இந்த சமயம் அனைத்து தேசங்களும் தேவனுடைய தேசத்தை யூதர்களுக்கு கொடுக்கவில்லை. இதனால் தேவன் கோபமாக உள்ளார்.** 1922ம் ஆண்டு முதல் புறஜாதி தேசங்கள், தங்களுடைய தவறை நினைத்து வருத்தப்பட்டு கடைபிடிக்காமல் இருந்த தங்களுடைய வாக்குறுதியை, தார்மீக கடமையாக எண்ணி யூதர்களுக்கென்று தனி சுயமான தேசத்தை கொடுக்க முன் வந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக, 1947ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஐ.நா. பகிர்வு திட்டம், புதிய இஸ்ரயேல் தேசத்தின் அளவை மிகவும் குறைத்தது. **அவர்கள் என் தேசத்தை பங்கிட்டார்கள். இதனால் தேவன் கோபமாக உள்ளார்...**

1948ம் ஆண்டு இஸ்ரயேல் தேசம் விடுதலையடைந்தபோது, ஆறு அராபிய நாடுகளின் கூட்டுப்படைகள் புதிதாய் பிறந்த தேசத்தின் மீது படையெடுத்தன.100 அராபியர்களுக்கு இணையாக ஒரு யூதன் என்ற விகிதத்தில் இருந்த இஸ்ரேலிய படைகள், படையெடுத்தவர்களை

விரட்டியதோடு மட்டுமல்லாமல், தங்களுக்கு உரிமையான அவர்களுடைய அதிக இடங்களையும் கைப்பற்றியது. இந்த தேசம் யாருக்கு சொந்தம் என்பதை தேவனுடைய திருவுளம் உலகத்துக்கு சொன்னது. அந்த சமயத்தில் ஒரே ஒரு தோல்வியை மட்டும் வெற்றிபெற்ற இஸ்ரயேல் படைகள் சந்தித்தன. அவை கிழக்கு எருசலேமை கைபற்ற முடியாததே ஆகும்.

## கிழக்கு எருசலேமை ஜோர்டான் ஆக்கிரமித்தது

அரபு தேசமான டிரான்ஸ் ஜோர்டான், கிழக்கு எருசலேமை கைப்பற்றி, யூதர்களை எல்லாம் வெளியேற்றி, யூதர்களின் புனித ஸ்தலத்தை எல்லாம் அழித்து இழிவுப்படுத்தியது. இவையெல்லாம் எருசலேம் "ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாக" இருந்த போது நடந்தது. ஐ.நா. சபையின் பிரகடனத்தை மதிக்காத டிரான்ஸ் ஜோர்டான், யோர்தான் நதியின் மேற்கு கரையையும் கைப்பற்றியது. இதன் பின்னர் டிரான்ஸ் ஜோர்டான் என்ற பெயரை, ஜோர்டான் என்று சுருக்கிக் கொண்டதோடு மட்டுமல்லாமல், யோர்தான் நதியின் கிழக்கு மற்றும் மேற்கு கரை இரண்டையும் கைப்பற்றி ஆட்சி செய்து வந்தது.

ஆனால் ஜோர்டான் "மேற்குக் கரையை" கைப்பற்றியதை பல நாடுகள் அங்கீகரிக்கவில்லை. பிரிட்டனும், பாகிஸ்தானும் மட்டுமே அங்கீகரித்தது. தம்முடைய நேச நாடுகளான சிரியா, லெபனான், எகிப்து மற்றும் சவுதி அரேபியாவால் ஜோர்டான் கண்டிக்கப்பட்டன. இந்த நேச நாடுகள் அனைத்தும் அரபு நேச நாடுகள் கூட்டணியிலிருந்து ஜோர்டான் விலக்கப்பட வேண்டும் என்று விருப்பப்பட்டது!(28). 6,00,000 அராபியர்கள் "தற்காலிகமாக" நாட்டை விட்டு வெளியேறினார்கள். ஆனால் புதிதாய் பிறந்த இஸ்ரயேல் தேசத்தை அராபிய படையெடுப்பார்களால் அழிக்க முடியாததால் "தற்காலிகமாக" இருந்தது நிரந்தரமானது. 6,00,000 என்ற கணக்கு ஒரு பொய் என்று டேவிட் பென் - குரியன் ஆணித்தரமாக விவாதிக்கிறார். "அகதிகள் பிரச்சனை என்ற ஒரு காரியம் மிகப்பெரிய பொய்யாகும். எங்கள் மக்களிடமும் இவை தவறுதலாகவே காணப்படுகிறது...என்னிடம் அனைத்து கணக்கும் உள்ளது. 1948ம் ஆண்டில் இஸ்ரயேல் தேசத்தில், இருந்து 1,80,000 அராபியர்கள் மட்டுமே வெளியேறினர். முழுவதுமாக 3,00,000 அராபியர்கள் இஸ்ரயேலில் இருந்தனர். 1, 20, 000 அராபியர்கள் மீந்திருந்தனர்"(29).

1967ம் ஆண்டு நடைபெற்ற ஆறு நாள் யுத்தத்தில், இஸ்ரேலை "கடலில் தள்ளுவோம்" என்று எகிப்து சிரியா மற்றும் ஜோர்டான் நாடுகள், கொக்கரித்தது. ஆனால் "ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியான" எருசலேமை விடுவித்து, யூதர்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம்கள் தங்களுடைய புனித ஸ்தலத்தில் வேண்டிக்கொள்ள இஸ்ரயேல் அனுமதித்தது. மேற்குக் கரை மற்றும் காசாவையும் இஸ்ரயேல் விடுவித்தது. எவ்வளவு எளிதாக வரலாறு மறக்கப்பட்டுவிட்டது. ஒப்பிட்டு பார்க்கும்போது, சிற்சில தவறுகள் தவிர, இஸ்ரயேல் மிகவும் மனிதத் தன்மையோடு நடந்துகொண்டது. ஜோர்டான்

மற்றும் எகிப்தின் ஆளுகையில் நடந்த உண்மைகள் பற்றி "கொடுமையான உண்மைகள்" என்ற பிரிவில் உள்ள கூற்றை காணலாம் (30).

"சுமார் 19 வருடங்களாக, அதாவது 1967ம் ஆண்டு வரை, 20 UNWRA அகதி முகாம்கள் இருந்த மேற்குக் கரையை ஜோர்டான் மிக கடுமையாக கைப்பற்றியது. டிசம்பர் '55, ஏப்ரல் '57, ஏப்ரல் '63, நவம்பர் '66 மற்றும் ஏப்ரல் '67ல் பாலஸ்தீனர்கள் புரட்சி செய்தபோது, ஹுசைன் ராஜா பீரங்கி தளவாடங்களை அனுப்பி, நகரத்தின் தெருக்கள் மீது குண்டு வீசியதோடு மட்டுமல்லாமல், பார்க்கின்ற எல்லோரையும் கண்டபடி சுட்டு, நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்றனர்.

19 வருடங்கள் எகிப்தின் ஆதிக்கத்திலிருந்த காசா பகுதியில், 8 UNWRA அகதிகள் முகாம்கள் இருந்தன. இந்த அகதிகள் முகாம்களில், பாலஸ்தீனியர்கள் கூட்டமாக அடைக்கப்பட்டு வாழ்ந்து வந்தனர். எகிப்து எந்த அகதிகளையும் ஏற்றக்கொள்ளவில்லை: அவர்களுக்கு தேசம் இல்லாமல் ஆக்கினார்கள், பாஸ்போர்ட்டும் நிராகரிக்கப்பட்டது மற்றும் எகிப்தில் வேலை செய்யவோ (அல்லது) பயணம் செய்வதையும் தடுத்தார்கள் (இதற்கு மாறாக, 1967ம் ஆண்டிற்கு பிறகு, பாலஸ்தீனியர்கள் இஸ்ரயேலில் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டார்கள்).

19 வருடங்கள் மிக கொடுமையான முறையில் ஆக்கிரமிக்கப்பட்ட சக அராபியர்களின் இடங்கள், ஜோர்டான் மற்றும் எகிப்து ஆட்சியில் பொருளாதார தேக்க நிலையிலும் மற்றும் கடுமையான வேலையில்லா திண்டாட்டத்தாலும் அவதிப்பட்டது. 1960ம் ஆண்டில் தோராயமாக வேலையில்லா திண்டாட்டம் 35% - 45% க்குள் இருந்தது. மற்றும் அகதிகளின் வேலையில்லா திண்டாட்டம் சற்று அதிகமாக 83% தொட்டது. ஆனால் இந்த சம்பவங்கள் நடைபெற்ற காலம் முழுவதும், முழு உலகமும் அமைதியாகவே இருந்தது. 1967ம் ஆண்டிற்கு பிறகு இஸ்ரயேல் இந்த பிரதேசங்களை கைப்பற்றியவுடன், பாலஸ்தீன அராபியர்களின் "முறையான உரிமைகள் மற்றும் தேசிய நலனை" பற்றிப் பேச ஒரு சிலர் கண்டுபிடித்தார்கள்.

மனித நேயம் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது, இஸ்ரயேலின் ஆட்சியில் அராபியர்களின் வாழ்க்கைதரம் பெரும் அளவில் மேம்பட்டிருந்தது. 1989ம் ஆண்டு, வேலையில்லா திண்டாட்டம் வெறும் 1%ஆக இருந்தது மற்றும் சராசரி நபரின் தலா மொத்த வருமானம், 20 வருடங்கள் குறைவான காலத்திலே மும்மடங்கு உயர்ந்தது. 1967ம் ஆண்டிற்கு முன்னர், குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000க்கு 140 என்று இருந்தது. ஆனால் தற்போது இஸ்ரயேலின் ஆட்சி காலத்தில் அவை 1000க்கு 30 என்று குறைக்கப்பட்டுள்ளது. இந்த காலத்தில், 1000க்கு 80 என்று குழந்தைகளின் இறப்பு விகிதம் மற்ற அரபு தேசங்களில் இருந்தது. இஸ்ரயேலின் "ஆக்கிரமிப்பு" சமயத்தில், 7 அராபிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. ஆனால் 1967ம் ஆண்டிற்கு முன்னர்

இவையெல்லாம் எதுவுமில்லாமல் இருந்தது. இருந்தாலும் இன்றளவும் இஸ்ரயேலே தாக்கப்படுகின்றது.

மேற்கு பாலஸ்தீனத்திலிருந்த தங்களுடைய அரேபிய சகோதரர்களை ஏற்றுக்கொள்ள அராபிய தேசங்களுக்கு மனது இருந்திருந்தால், 40 வருடங்களுக்கு முன்னதாகவே அவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பார்கள். ஆனால் அரபு தேசத்திலிருந்து வந்த யூத அகதிகளை இஸ்ரயேல் தேசம் ஏற்றுக்கொண்டது. பாலஸ்தீனிய அராபியர்கள் ஒரே மொழி, மதம் மற்றும் கலாச்சாரத்தை கொண்டவர்கள். இவர்களில் 70% பேர், மூன்று தலைமுறைகளுக்கு முன்னதாக பணத்தேவைகளுக்காக சுற்றியிருந்த அரபு தேசங்களிலிருந்து பாலஸ்தீனத்தில் அடைக்கலம் புகுந்த இவர்களின் தாத்தாக்களும் ஒரே நாட்டில் பிறந்தவர்கள். ஆனால் 22 அரபு தேசங்களும் தங்களுடைய பாலஸ்தீன சகோதரர்களுக்கு உதவ மனமில்லாமல், இஸ்ரயேலுக்கு எதிரான ஒரு அரசியல் ஆயுதமாகவே இவர்களை உபயோகித்துக்கொண்டு வருகின்றனர். மனித தன்மையற்ற இந்த மாற்றங்களையும் ஐ.நா. சபை ஆதரித்து வருகிறது.

1970ம் ஆண்டு, மத்தியில் பாலஸ்தீன அராபிய அகதிகளுக்கு காசாவில் புதிய நல்ல தரமான வீடுகளை கட்டித்தர இஸ்ரயேல் முயற்சித்தது. ஆனால் அரபு தேசங்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, இஸ்ரயேலை கண்டிக்கும் விதமாக 32/90 தீர்மானத்தை ஐ.நா. பொது சபை வெளியிட்டது. இதன் மூலம் அகதிகள் இடம்பெயர உதவி செய்த இஸ்ரயேலைக் கண்டித்ததுடன் "அதே முகாமில் அகதிகளை திரும்பவும் குடியமர்த்த" உத்திரவிட்டது. உண்மையைக் கண்டறியும் விதமாக பத்து தொலைகாட்சிக் குழுவினர்களை அழைத்துக் கொண்டு, 1988ம் ஆண்டு ஜனவரி மாதம், மூத்த ஐ.நா. சபை அதிகாரி காசாவிற்கு வந்தார். எல்லா பழியையும் இஸ்ரயேல் மீது போட்டனர்.

## அகதிகள் பிரச்சனை

இஸ்ரேல் தேசம் பிறந்த போது, ஆறு அரபு தேசங்கள் அந்நாட்டின் மீது போர் தொடுத்தலால், சுமார் 6,00,000 அராபியர்கள் இடம் பெயர்ந்ததாக பல பேர் கருதி வருகின்றனர். ஆனால் அராபியர்களின் வெறுப்பு காரணமாக, அந்த 6 அரபு தேசத்தில் வாழ்ந்த சுமார் 8, 00, 000 யூதர்கள், தங்கள் உயிருக்கு பயந்து அந்தந்த நாட்டை விட்டு வெளியேறியது யாருக்கும் தெரிந்திருக்காது. இந்த பிரச்சனைக்கு ஒரே தீர்வு - அகதிகளை நியாயமான முறையில் பரிமாற்றம் செய்துகொள்வதே ஆகும்.

கடுமையான நிதி நெருக்கடியிலும், சுமார் 8,00,000 யூத அகதிகளை இஸ்ரயேல் ஏற்றுக்கொண்டது. ஆனால் அவர்களின் சொந்த அரேபிய சகோதரர்களான அகதிகளை அரபு தேசங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. மாறாக அராபிய அகதிகளை, முகாம்களில் அடைத்து வைத்து, வெறுப்பையும் துன்பத்தையும் காண்பிக்கச் செய்து, இஸ்ரயேலுக்கு எதிராக

உலகத்தின் கவனத்தை திருப்ப, மாதிரி பிரச்சாரம் செய்து வருகிறது.அதில் அவர்கள் வென்றார்கள்.

## "அவர்கள் என் தேசத்தை பங்கிட்டார்கள்"

**1967**ம் ஆண்டு நடைபெற்ற போரில் இஸ்ரயேல் தேசம் எருசலேம் மற்றும் மேற்குக் கரையை **கைப்பற்றிய** பின்னரே, இந்த பிரதேசங்களை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி என்று ஐ.நா. பொது சபை தைரியத்துடன் கூறி வருகிறது. பாலஸ்தீனத்தை (எருசலேம் உட்பட) சட்டப்பூர்வமாகவும், தார்மீகமாக மற்றும் வரலாற்று உரிமைகளுடன் தங்களுடைய தாயக தேசமாக யூத மக்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று உலக நாடுகளின் கூட்டமைப்பு 1922ம் ஆண்டு அங்கீகரித்தது. 1922ம் ஆண்டு, யூதர்களுக்கு எருசலேம் மீது உரிமை உள்ளது என்று உலக நாடுகள் அங்கீகரித்தது, இன்றளவும் இந்த உரிமை செல்லும். இதன் பின்னர் பெரும் அளவிலான பெட்ரோலிய எண்ணெய் வளங்கள் அரபு தேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. தங்களுடைய சொந்த பெட்ரோலிய எண்ணெய் தேவைக்காக, உலக தேசங்கள் இஸ்ரயேலின் உரிமையை சமரசம் செய்து வருகிறது. இதனோடு, அமெரிக்கா நிர்வாகமும் ஐ.நா. சபையும் கிழக்கு எருசலேமை "ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி" என்று விவரித்து வருகிறது. கிழக்கு எருசலேமை ஜோர்டான் ஆக்கிரமித்த போதும், அவை "ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகவே" இருந்தது. ஆனால் இன்றோ எருசலேமின் எந்த ஒரு பகுதியும் "ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாக" இல்லை.

பகுக்கப்படாத எருசலேம் இஸ்ரயேலுக்கு சொந்தமாகும். இதே போலவே "மேற்குக் கரையும்" பிரிக்கக் கூடாதது ஆகும். ஆனால் அமெரிக்கா மற்றும் உலக வல்லரசுகளின் கடுமையான அழுத்தத்திற்கு உட்பட்டு, தங்களுக்கு உரிமையுள்ள யூதேயா - சமாரியா பிரதேசமான மேற்குக் கரையை விட்டுக் கொடுக்க இஸ்ரயேல் அரசாங்கம் தயாராக இருப்பது ஒரு துரதிஷ்டவசமானதாகும்.

இந்த சம்பவங்களை பற்றிய கர்த்தரின் எண்ணம் தான் என்ன? தேசங்கள் மீது தேவன் கோபமாக உள்ளார். யாருடைய தேசம் அது? எப்படி உலக இராஜ்யங்கள் இஸ்ரயேலுக்கு அழுத்தம் கொடுத்து இந்த இடங்களை அராபியர்களுக்கு தரமுடியும்? தற்போது இஸ்ரயேலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யூதர்களின் கூட்டிச் சேர்ப்பு மற்றும் தேனுடைய இராஜ்யம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பே, இஸ்ரயேலை "என் ஜனம்" என்றும் அவர்களின் தேசத்தை "என் தேசம்" என்றும் தேவன் குறிப்பிடுகிறார் (எசேக்கியேல் 38:16; ஏசாயா 11:11). "அவர்கள் என் தேசத்தை பங்கிட்டார்கள். யாருக்கு இந்த தேசம் சொந்தமானது? அராபியர்களுக்கா? இல்லை! தேசம் தேவனுக்கு சொந்தமானது. அதனை இஸ்ரயேல்

புத்திரர்களுக்கு தேவன் கொடுத்தார். ஆனால் உலக தேசங்கள் தேவனுடைய தேசத்தை மிக கொடிதான முறையில் பங்கிட்டனர். 77% இடங்களை இஸ்ரயேலிடமிருந்து அதாவது “தம் ஜனமிடமிருந்து” பிடுங்கி அராபியர்களிடம் கொடுத்தார்கள். ஆனால் இன்றோ அமெரிக்காவும் மற்ற உலக நாடுகளும் இஸ்ரயேலுக்கு அழுத்தம் கொடுத்து, இன்னும் அதிகமான தேவனுடைய இடங்களை அராபியர்களுக்கு தர முயற்சித்து வருகிறார்கள். ஆனால் இஸ்ரயேல் தேசத்திற்கான திட்டத்தை கர்த்தர் வைத்துள்ளார்.

## அத்தியாயம் 4

# எல்லைகளை விரிவாக்குதல்

250 விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் ஆறு வருடங்கள் ஆய்வு செய்து, 2020ம் ஆண்டிற்குள் இஸ்ரயேலின் மக்கள் தொகை 8, 100, 000ஐ தாண்டும் என கணித்துள்ளார்கள். இதன் மூலமாக உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட வளர்ந்த மற்றும் முன்னேறிய நாடுகளில் இஸ்ரயேல் முதலிடத்தை பிடிக்கும். ஜப்பான் மற்றும் நெதர்லாண்டை விட, 2.5 மடங்கு அதிக மக்கள் தொகையை இஸ்ரயேல் பெற்றுவிடும். இதனால் வீடு கட்டுவதற்கான கடுமையான நிலப்பற்றாக்குறை ஏற்படும். இந்த காலத்தைப் பற்றி கருத்தில் கொண்டே "அந்நாளிலே (இஸ்ரயேலின்) பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம்" என்று தீர்க்கத்தரிசி கூறுகிறார். (மீகா 7:11).

சிதறுண்ட ரஷ்யா மற்றும் அமெரிக்காவிலிருந்து, திரளான யூதர்கள் 2020ம் ஆண்டிற்கு முன்னரே இஸ்ரயேலுக்கு திரும்பி வருவார்கள் என்று வேதாகமம் (ஏசாயா 11 & சகரியா 10) குறிப்பிடுகின்றது. ஆனால் நிலப் பற்றாக்குறை நிச்சயம் வராது. இந்த பெருந்திரளான யூதர்களின் வருகைக்கு முன்னர், கடைசி இஸ்ரயேல் - அரேபிய போர் நடைபெறும். இந்த போரில் இஸ்ரயேல் எல்லைகள் விரிவாக்கப்பட்டு, குறைவான மக்கள் தொகை கொண்ட முழு கோலான் குன்றுகளும், ஜோர்டான் மற்றும் தெற்கு லெபனான் பிரதேசங்களும் சேர்த்துக்கொள்ளப்படும் (ஏசாயா 11:14; செப்பனியா 2:8, 9; மீகா 7:11, 14; ஒபதியா 18-20). இந்த இடங்கள் எல்லாம் இஸ்ரயேலுக்கு தரப்பட வேண்டும் என்று 1917ம் ஆண்டு பால்ப்போர் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைவிட இன்னும் அதிகான இடங்களை தேவன் தருவார் (ஆதியாகமம் 15:18-21).

இஸ்ரயேலின் தேவன் அதிசயங்களின் தேவன் ஆவார். இஸ்ரயேலின் இறுதி விதி ஏற்படுவதற்கு முன்னரே, தேவன் அவருடைய அதிசயங்களை செய்ய தொடங்கிவிட்டார். இஸ்ரயேலுடன் எல்லா தேசங்களும் ஐக்கியமாக இருக்க, தேவன் பல அதிசயங்களை செய்வார். தேவனுடைய நோக்கங்கள் பற்றி எரேமியா தீர்க்கதரிசி இவ்வாறாக கூறுகிறார்:

"கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார்"-எரேமியா 31:11.

உலக தேசங்களின் அரசாங்கங்கள் அழிக்கப்பட்ட பின்னர்,

அத்தேசங்களின் மக்கள் "எருசலேமிலே சேனைகளின் கர்த்தரை தேடுவார்கள்". இதன் பின்னர் எருசலேம் தேவனுடைய இராஜ்யத்தின் தலைநகரமாக விளங்கும் (சகரியா 8:20-23). இஸ்ரயேலையும், எருசலேமையும் பங்கிடுவதற்கு அல்லது எடுத்துக் கொள்ளுவதற்கு வராமல், அத்தேசங்கள் யாவும் இஸ்ரயேலின் தேவனை பற்றி அறிந்துக்கொள்ள எருசலேமிற்கு வருவார்கள். இதனால் தேவனுடைய வழியில் அவர்கள் நடப்பார்கள். இஸ்ரயேல் தேசத்தை பங்கிடாமல், தேவனை பற்றித் தெரிந்துக் கொள்ள வருவார்கள் (ஏசாயா 2:1-4). ஆம், மேசியாவின் யுகம் நிச்சயம் வரும்.

"ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம். கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு (இராஜ்யம்) மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து (ஆசீர்வதிக்கப் போகும் ஆவியின் வித்து) வேதமும், எருசலேமிலிருந்து (ஆசீர்வதிக்கப் போகும் மாம்சீக வித்து) கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." ஏசாயா 2:1-4.

எருசலேமில் இருக்கும் யாக்கோபின் தேவனை வணங்க உலக மக்கள் எல்லோரும், அராபிய மக்கள் உட்பட வருவார்கள். ஏனெனில் இஸ்ரயேலை தேவன் ஆசீர்வதிக்கிறார் என்று அவர்கள் தெரிந்துகொள்ளுவதின் மூலம், பல பாஷைகள் பேசும் புறஜாதி மக்கள் இஸ்ரயேலின் கர்த்தரை வணங்க வருவார்கள் (சகரியா 8:3, 21-23):

"நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு பட்டணத்தின் குடிகள் மறுபட்டணத்தின் குடிகளிடத்தில் போய், நாம் கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம்பண்ணவும் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்து போவோம் வாருங்கள்; நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள். அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமூகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக் காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக் கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர்

*சொல்லுகிறார் என்றார்." (சகரியா 8:3, 21-23).*

*இஸ்ரயேல் தேசம் உருவாகி ஐம்பது வருடங்கள் முடிந்த நிலையில், அதன் தொடக்கம் பிரச்சனையாகவே இருந்தது. அழுகை மற்றும் கஷ்டங்களை தாண்டி, புறஜாதி மக்களுக்கு குன்றின் மேல் ஏற்றப்பட்ட விளக்கு போல் இஸ்ரயேல் விளங்கும். "உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்." (ஏசாயா 60:3,18). இஸ்ரயேலுக்கு விரிவான சமாதான தீர்வை தேவன் ஏற்படுத்துவது, பூமியிலுள்ள சகல ஜாதிகளும் நித்திய சமாதானத்தை பெற்றுக் கொள்வதற்கு ஒரு சமிக்ஞையின் தொடக்கமாகும். இதன் பின்னர் ஆபிரகாமிடம் ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தம் ஈசாக்கிடம் பின்பு யாக்கோபிடம் சென்று, தற்போது நிறைவேறும் தருவாயில் உள்ளது. "உன் சந்ததி பூமியின் தூளைப்போல் இருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 28:14). இஸ்ரயேலின் தேவன் அதிசயங்களின் தேவன். ஏசாயா தீர்க்கத்தரிசி கூறும் அற்புதமான வாக்குத்தத்தங்களை முழு மனுகுலமும் பெற்றுக்கொள்ளும் போது இஸ்ரேல் தன்னுடைய இறுதி இலக்கை அடைவதற்கு, அவருடைய அதிசயங்களை செய்ய தேவன் தொடங்கிவிட்டார். "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவு கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர் தடாகமாகவும், வரண்ட நிலம் நீரூற்றுகளும் ஆகும், வலுச்சர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும். அங்கே பெரும்பாதையான வழி இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே வருவதில்லை; அந்த வழியிலே நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காண்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்த களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்." ஏசாயா 35:5-10.*

------------------------------------------

1. *தாமஸ் ஷா, பயணங்களும் மற்றும் கண்டவைகளும் (ஆக்ஸ்போர்டு: தியேட்டரில் அச்சிடப்பட்டவை, 1738).*
2. *வோல்னி, சிரியா மற்றும் எகிப்தின் வழியான பயணங்கள்*
3. *அல்போன்ஸ் டி லா மார்டின், கிழக்கின் நினைவுகூருதல்கள் (பிலடெல்பியா: கேரே, லியா மற்றும் பிளான்ஸ் ஆர்ட் 1838)*
4. *பிரிட்டன் வெளியுறவு அலுவலக ஆவணங்கள் 78/1294,* Pol.No.36.

5. டைம், ஜனவரி 3, 1994
6. இர்விங் ஹோரவ் மற்றும் கார்ல் கெர்ஷ்மேன், இஸ்ரயேலும், அராபியர்களும் மற்றும் மத்திய கிழக்கும் (நியுயார்க்: குவாடி ராங்க அச்சகம், 1972), பக்கம் 178.
7. அமெரிக்காவின் வெளியுறவு உறவுகள்: தூதரக ஆவணங்கள்.
8. உலக நாடுகளின் கூட்டமைப்பின் வெளியீடுகள், வி.ஐ.ஆ. (V.I.A) ஆவணங்கள், 1935, 27வது அமர்வு
9. ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிவாரண மற்றும் பணிகள் மதிபபாய்வுரை, தகவல் ஆவணம் எண்.6.
10. அன்னி லட்டோர், இஸ்ரயேலின் உயிர்த்தெழுதல் (கிளிவ் லேண்ட்: உலகம், 1968) பக்கம்.318
11. மைக்கேல் கர்டிஸ், பாலஸ்தீனியர்கள்: மக்கள், வரலாறு, அரசியல் (நியூ புருன்ஸ்விக்: டிரான்சாக்சன் புத்தகங்கள், 1975)
12. ஜார்ஜ் ஆன்டானியோஸ், அரபியர்களின் விழிப்பு: அரபிய தேசிய இயக்கத்தின் கதை (பிலடெல்பியா: 1939).
13. Ibid
14. ஹோரவ் மற்றும் ஹெர்ஷ்மேன், இஸ்ரயேல், அரபியர்கள் மற்றும் மத்திய கிழக்கு
15. Ibid., பக்கம் 178.
16. கமால் ஜம்லட், லெபனானுக்காக பேசுகிறேன் (லண்டன்: செட் அச்சகம் 1982).
17. Ibid
18. டிரோவ் (தினசரி நாளிதழ், நெதர்லாந்து), மார்ச் 31, 1977.
19. பெலிக்ஸ் போவட்; எகிப்து, பாலஸ்தீனம் மற்றும் போனிசியா: புனித தேசத்திற்கு பயணம் (லண்டன்: ஹோடர் & ஸ்டவ்டென், 1882).
20. ஸ்டீபன் ஒலின், சிரியா மற்றும் எகிப்தின் வழியான பயணங்கள் (நியூயாரக்: ஹார்பர் & பிரதர்ஸ், 1857).
21. எலியாட் கிரீன், எருசலேம் போஸ்ட், ஜுன் 11, 1994, பக்கம்6.
22. ஹாவ் மற்றும் கெர்ஸ்மேன்; இஸ்ரயேல், அராபியர்கள் மற்றும் மத்திய கிழக்கு, பக்கம் 178.
23. லண்டன்: கனம்பொருந்திய எழுது பொருட்கள் அலுவலகம் அத்தியாயம் 10, 1937.
24. எர்னஸ்ட் பிரான்ஹன் ஸ்டைன், என் மக்களுக்கான நியாயம் (லண்டன்: நிக்கோஸ்சன் & வாட்ஸன், (1943)), பக்கம் 130.
25. ஜோன் பீட்டர்ஸ், பழங்காலம் (நியூயார்க்: ஹார்பர் & ரோவ் 1948), பக்கம் 4
26. மார்டின் கில்பர்ட், அரபு - இஸ்ரேலிய சண்டைகள் (லண்டன்: வெய்டன் பீல்டு & நொக்கோல்சன், 1992), பக்கம் 8.
27. லட்டோர், இஸ்ரயேலின் உயிர்தெழுதல், பக்கம் 203.
28. யெதல்யா அட்லாண்ட், கொடுமையான உண்மைகள் (எருசலேம்: சி.எம்.இஸ்ரயேல் குழு லிமிடெட்; 1989),

பக்கம் 19

29. ஹோவ் மற்றும் கெர்ஸ்மேன், இஸ்ரயேல், அராபியர்கள் மற்றும் மத்திய கிழக்கு, பக்கம் 207.

30. அட்லாண்ட், கொடுமையான உண்மைகள் பக்கம் 19, 20.